

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக, இரண்டு நபர்களுக்கு ஈமச்சடங்கு மற்றும் இயற்கை மரண உதவித்தொகையாக தலா ரூ.17 ஆயிரத்திற்க்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (17.10.2016) வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ உடனுள்ளார்.

செ.வெ.எண்: 725/2016 நாள்: 17.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள்,**
**பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில்,**
**48 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக**
**ரூ. ஒரு இலட்சத்து 11 ஆயிரத்திற்கான காசோலைகளையும்,**
**இரண்டு நபர்களுக்கு ஈமச்சடங்கு மற்றும் இயற்கை மரண உதவித்தொகையாக**
**ரூ. 34 ஆயிரத்திற்க்கான காசோலைகளையும்**
**இன்று (17.10.2016) வழங்கினார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பொது மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் இன்று (17.10.2016) நடைபெற்றது.

திங்கட்கிழமை தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு குறைகள் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், நலத்திட்ட உதவிகளும் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பாக, 2015-16-ம் கல்வியாண்டில் 10 மற்றும் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வில் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களை பிடித்த 48 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. ஒரு இலட்சத்து 11 ஆயிரத்திற்கான காசோலைகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

பின்னர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பாக, இயற்கை மரணமடைந்த கோலஞ்சி மடம் கிராமத்தை சார்ந்த லெட்சுமணன் என்பவரின் மனைவி திருமதி. சீதா மற்றும் ஆறுகாணி என்ற இடத்தை சார்ந்த கிருஷ்ணன் காணி என்பவரின் மனைவி திருமதி. சேதுபாய் ஆகியோர்களிடம், ஈமச்சடங்கு மற்றும் இயற்கை மரண உதவித்தொகையாக தலா ரூ. 17 ஆயிரத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக லூயி பிரெயிலி கூட்டரங்கில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் இன்று (17.10.2016) வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திரு. எம். சந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் திரு. சிவதாஸ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் திரு. பி.வி.சரவணன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.